வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண்: 68/2024 நாள்: 16.03.2026

அரசு தரப்பு சாட்சி : 1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பாண்டி | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தந்தை பெயர் | முனியாண்டி | தொழில் | : | சலூான் கடை |
| ஊர் : | பெரியகுளம் | வயது | : | 51/2026 |

( 1, 3 முதல் 5, எதிரிகள் ஆஜர். 6 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS மனு சமர்ப்பிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது )

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023 ம் ஆண்டு, பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அரசு தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை:–

நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். சலூான் கடை வைத்துள்ளேன். வழக்கில் இறந்து போனது எனது மகன் விஜயராஜன் ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியும். முத்துராஜ் பிரதீப்பை தெரியும். அவர் இன்று ஆஜர் இல்லை. கடந்த 12.04.2023 ஆம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் நான் கடையில் இருந்தேன். அப்போது எனது மைத்துனர் மகன் பிரசாந்த் எனக்கு போன் செய்து எனது மகன் விஜயராஜனை கொலை செய்து விட்டதாகவும் உடனே வாருங்கள் என்று கூறினார். நான் உடனே அவர் சொன்ன மலையக்காரர் தென்னந்தோப்பிற்கு சென்றேன். நான் அங்கு சென்று பார்த்த போது என் மகன் விஜயராஜன் பின்னங்கழுத்து, தலை, சங்கு மற்றும் உடலின் பல இடங்களில் வெட்டுக்காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். சிறிது நேரத்தில் தகவல் தெரிந்து போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் என் மகனின் பிரேதத்தை எடுத்து சென்றார்கள். பின் நான் பெரியகுளம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் பற்றி விவரம் சொன்னேன். என் உடன் வந்த எனது மைத்துனர் பிரபாகரன் நான் சொல்ல சொல்ல புகார் மனு எழுதி கொடுத்தார். அந்த புகாரினை நான் போலீசார் வசம்

விசாரணை செய்ய வேண்டி கொடுத்தேன். புகாரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ. 1** ஆகும். பின் பிரேத பரிசோதனை முடித்து என் மகனின் பிரேதம் பெற்று நல்லடக்கம் செய்தோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR
Date: 2026.03.16 18:07:56 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.